

## நீங்கள் 1980-ல் அல்லது அதற்குப் பிறகு பிறந்திருந்தால்

- எல்லாருக்கும் காப்புறுதி உண்டு - உங்களுக்கு ஏற்கனவே மருத்துவப் பிரச்சனைகள் மற்றும்/அல்லது இயலாமைகள் இருந்தாலும் பாதுகாப்பு பெறுவீர்கள்.
- நீங்கள் 1980க்கும் 1990க்கும் இடையில் பிறந்திருந்தால், 2020ஆம் ஆண்டில் கேர்ஷீல்டு லைஃப் திட்டத்தில் தானாகவே சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்
- நீங்கள் 1990க்குப் பிறகு பிறந்திருந்தால், 30 வயதை எட்டும்போது கேர்ஷீல்டு லைஃப் திட்டத்தில் சேர்வீர்கள்.
- இடைக்கால நிதி உதவிகள் 2020 முதல் 2024 வரை கிடைக்கும்.

மேல்விவரங்களுக்கு, அன்புகூர்ந்து careshieldlife.gov.sg இணையத்தளத்தை நாடவும்

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், அன்புகூர்ந்து 1800-222-3399 என்ற எண்ணில் மத்திய சேமநிதிக் கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்

# CareShieldLife



## உங்களைக் கவனித்துக்கொள்கிறோம், வாழ்நாள் முழுவதும்

நமது மக்கள்தொகை மூப்படைவதால், அதிகமான சிங்கப்பூரர்களுக்கு நீண்டகாலப் பராமரிப்பு தேவைப்படும். **சிங்கப்பூரர்கள் அனைவருக்கும் நீண்டகாலப் பராமரிப்பு கட்டுப்படியாவதை உறுதிப்படுத்த** சுகாதார அமைச்சு **3** புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துகிறது

## கேர்ஷீல்டு லைஃப் திட்டம் 1 அக்டோபர் 2020 அன்று தொடங்கப்படும்போது என்னவாகும்?



## நீங்கள் 1979-ல் அல்லது அதற்கு முன்பாகப் பிறந்திருந்தால்

- உங்களது தற்போதைய எல்டர்ஷீல்டு திட்டங்கள் உங்களுக்குத் தொடர்ந்து பாதுகாப்பளிக்கும்.
- உங்களுக்குக் கடுமையான உடல் இயலாமைகள் ஏதும் இல்லாவிட்டால், 2021 கடைசியில் கேர்ஷீல்டு லைஃப் திட்டத்தில் சேர்ந்துகொள்ளலாம்.
- நீங்கள் 2023 கடைசிக்குள் சேர்ந்தால், $2,500 வரையிலான பங்கேற்பு ஊக்கத்தொகை கிடைக்கும். மெர்டேக்கா, முன்னோடித் தலைமுறையினருக்குக் கூடுதலாக $1,500 கிடைக்கும்.

# கேர்ஷீல்டு லைஃப்

என்பது கடுமையான உடல் இயலாமையுள்ள சிங்கப்பூரர்களின் நீண்டகால அடிப்படைப் பராமரிப்புத் தேவைகளுக்கு ஆதரவளிக்கும் நீண்டகாலக்



## கேர்ஷீல்டு லைஃப் திட்டம் தவிர, சிங்கப்பூரர்களின் நன்மைக்காக 2020-ல் இரு புதிய திட்டங்களும் தொடங்கப்படுகின்றன

## கேர்ஷீல்டு லைஃப் 4 வழிகளில் மேம்பட்ட பாதுகாப்பும் உறுதியும் அளிக்கும்

**1 வாழ்நாள் முழுவதும் வழங்குதொகைகள்**
உங்களுக்குக் கடுமையான உடல் இயலாமை இருக்கும்வரை

**2 வழங்குதொகை 2020-ல் மாதத்திற்கு $600 எனத் தொடங்கி**, 67 வயது வரை அல்லது ஏற்கப்படும் கோரிக்கை செய்யப்படும்வரை ஆண்டுதோறும் அதிகரிக்கும்

**3 சந்தாவைக் கட்டுப்படியாக்க அரசாங்க நிதி உதவிகள்**
சந்தாவைச் செலுத்த இயலாத காரணத்தால் யாரும் காப்புறுதியை இழந்துவிடமாட்டார்கள்

**4 சந்தாவை மெடிசேவ்** பயன்படுத்தி முழுமையாகச் செலுத்திடலாம்

## அருண் 2020-ல் தமது 30வது வயதில் கேர்ஷீல்டு லைஃப் திட்டத்தில் சேர்க்கப்படும்போது



அவருக்கு 30 வயதில் கடுமையான இயலாமை இருந்தால்

அவருக்கு வழங்குதொகை கிடைக்கத் தொடங்கியவுடன் சந்தா செலுத்துவதை நிறுத்திவிடுவார்

வாழ்நாள் முழுவதும் மாதத்திற்கு **$600** கிடைக்கும்

*கடுமையான உடல் இயலாமையால் பாதிக்கப்படும் வயது அதிகமாக இருந்தால், அவருக்கு மாதந்தோறும் கிடைக்கும் வழங்குதொகையும் அதிகமாக இருக்கும்.

அவருக்கு 67 வயதில் அல்லது அதற்குப் பிறகு கடுமையான உடல் இயலாமை ஏற்பட்டால்



**வாழ்நாள் முழுவதும்** மாதத்திற்கு **$1,200** கிடைக்கும்

அவர் 67 வயதில் சந்தா செலுத்துவதை நிறுத்திவிடுவார். ஆனால், காப்புறுதியின் பாதுகாப்பு தொடரும்.

*கேர்ஷீல்டு லைஃப் காப்புறுதித் திட்டத்தின் வழங்குதொகைகள் 67 வயது வரை அல்லது ஏற்கப்படும் கோரிக்கை செய்யப்படும்வரை ஆண்டுதோறும் அதிகரிக்கும், இவற்றுள் எது முன்னதாக நிகழ்கிறதோ அதுவரை அதிகரிக்கும். மேற்காணும் விளக்கத்தில் வழங்குதொகை ஆண்டுக்கு 2% உயர்வதாக ஊகிக்கப்பட்டுள்ளது. எதிர்கால வழங்குதொகை வழக்கமான சரியாக்கங்களைப் பொறுத்து மாறுபடக்கூடும்.

### மெடிசேவ் கேர் — புதிது
1 அக்டோபர் 2020 முதல்

கடுமையான உடல் இயலாமை உள்ளவர்கள் மெடிசேவ் சேமிப்பிலிருந்து மாதத்திற்கு **$200** வரை **ரொக்கமாக எடுக்கலாம்**

### எல்டர்ஃபண்டு — புதிது
31 ஜனவரி 2020 முதல்

கடுமையான உடல் இயலாமைகள் உள்ள **குறைந்த வருமானம் ஈட்டும் சிங்கப்பூரர்களுக்கு** உதவி புரிகிறது நீண்டகாலப் பராமரிப்புத் தேவைகளுக்கு உதவ மாதத்திற்கு **$250** வரை

**+ தற்போது நடப்பிலுள்ள மற்ற அரசாங்கத் திட்டங்களும் நிதி உதவிகளும்**